பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 26 திங்கட்கிழமை 09.02.2026 | அதிர்வு 192

## குற்றச்சாட்டை நிரூபித்தால் அரசியலுக்குக் ‘குட்பாய்’

### சிறீதரன் எம்.பி. பகிரங்கம்



“அரசமைப்பு பேரவை விவகாரம் தொடர்பில் எனக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிரூபித்தால்

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கின்ற சுவிஸ் தூதரக முயற்சி இடைநிறுத்தம்

## சைக்கிள் கட்சியின் நடவடிக்கையை அடுத்து

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்புகள் அனைத்தையும் ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டு வரும் நோக்கில் கொழும்பில் உள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் ஒழுங்குபடுத்தப்பட்ட விசேட சந்திப்பு இப்போது காலவரையறை குறிப்பிடாது தற்காலிகமாகத் தள்ளிவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

02

## யாழில் மோ. சைக்கிள் விபத்து! இளைஞர் ஒருவர் பரிதாபப் பலி!!

### மற்றொரு இளைஞர் படுகாயம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அதே வேளை, மற்றொரு இளைஞர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொன்னாலையில் இருந்து மாதகல் நோக்கி இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் நின்ற பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில்,

02

## திருமலை புத்தர் சிலை வழக்கு: பிணை மனு புதனன்று பரிசீலனை



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை கடற்கரையில் புத்தர் சிலை ஒன்றை வைத்து, அதையொட்டி சட்டவிரோதமான கட்டுமானத்தை அமைத்தமை தொடர்பான வழக்கில் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில்

02

### வடக்கு மாகாண

# கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் புதிய தலைவராக பிரகாஸ் நியமனம்

வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் புதிய தலைவராக க.பிரகாஸ், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் இன்று திங்கட்கிழமை நியமிக்கப் பட்டுள்ளார்.

ஆளுநர் செயலகத்தில் வைத்து இவருக்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டது.

இன்று தொடக்கம் செயற் படும் வகையில் இந்த நியம னம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### குற்றச்சாட்டை...

அரசியலில் இருந்து ஒதுங்குவதற்குத் தயார்." – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து சிறீதரன் எம்.பி. விலக்கப் பட்டுள்ளார். அந்தப் பதவி நாடாளு மன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியார் தொலைக் காட்சியொன்றுக்கு வழங்கிய நேர் காணலின்போதே சிறீதரன் எம்.பி. மேற் கண்டவாறு கூறினார்.

"அரசமைப்பு பேரவையில் இராணு வத்துக்கு ஆதரவாக எட்டு தடவைகள் சிறீதரன் வாக்களித்தார் எனப் பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

அதாவது நான் எட்டு தடவைகள் இராணுவத்தைத் தெரிவு செய்துவிட் டேன் என்ற விம்பத்தை மக்கள் மத்தி யில் உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கப் படுகின்றது.

அரசமைப்பு பேரவையில் நடக்கும் விடயங்களை ஊடகங்கள் முன் பகி ரங்கப்படுத்த முடியாது. எனவேதான் என்னை விசாரணை செய்த சுயாதீன ஆணைக்குழுவொன்றை அமைக்குமாறு கோரியுள்ளேன்.

வடக்கு, கிழக்கிலுள்ள மதத் தலை வர்கள், சிவில் அமைப்பினர் என்னை விசாரிக்கட்டும்.

சிறீதரன் தமிழ் இனத்துக்கு எதிரா கச் செயற்பட்டார், இராணுவத்துக்குச் சார்பாகச் செயற்பட்டார் என்பதை உரிய ஆவணங்கள் சகிதம் நிரூபித்தால் அர சியல் இருந்தே நான் ஒதுங்கி விடு கின்றேன்.

அரசியலில் இருந்து என்னை ஓரங்கட்டுவதற்கு உளவியல் போர் முன்னெடுக்கப்படுகின்றது. கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்தலில் தோற்றவர்கள் இதனைச் செய்கின்ற னர்." – என்றார்.

### தமிழ்க் கட்சிகளை...

இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற இருந்த அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகள் ஒவ்வொருவருக்கும் இந்த முயற்சி இடைநிறுத்தப்பட்டிருப்பது பற்றிய தக வல் இன்று காலை முதல் சுவிஸ் தூத ரக அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்ட தாக உறுதிப்படுத்த முடிந்தது.

தமிழர் தரப்புக்கள் மத்தியில் ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தும் சுவிஸ் தூ தரக முயற்சி ஒரு புறம் நடக்க, அதற் குச் சமாந்தரமாக மறுபுறத்தில் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றவிருந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி யின் பிரதிநிதிகள் தாமும் உள்ளடங்கிய தமிழ்த் தேசிய பேரவையின் பெயரில் அதேபோன்ற கூட்டம் ஒன்றை 19 ஆம் திகதிக்கு முன்னர் 15 ஆம் திகதியளவில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முயற்சி எடுத்த பின்னணியில் – அது பற்றிய செய்தி விலாவாரியாக இன்று காலை வெளியான சூழலில் – தன்னுடைய முயற்சியை உடனடியாக இடைநிறுத் தம் தீர்மானத்தை சுவிஸ் தூதரகம் மேற் கொண்டதாக அறியவருகின்றது.

அரசியல் கட்சிகளுக்கு மேலதிக மாக பல டசின் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் 15 ஆம் திகதி தாம் நடத்த உத்தேசித்த கூட்டத்துக்குத் தமிழ்த் தேசிய பேரவை அழைத்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றி ணைத்து ஒருமித்த நிலைப்பாட்டுக்கு கொண்டு வரும் முயற்சியை சுவிஸ் தூதரகம் சத்தம் சந்தடி, குழப்பமின்றி முன்னெடுக்க விரும்பிய சூழலில் அது பற்றிய செய்திகள் வெளியானமை சுவிஸ் தூதரகத்தை விசனத்துக்குள் தள்ளி இருப்பதாகவும் அறியவந்தது.

### பிணை மனு....

வைக்கப்பட்டிருக்கும் நான்கு தேரர்கள் உட்பட 10 எதிராளிகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் விளக்கமறியல் வைக்கப் பட்டுள்ளோருக்கு பிணை அனுமதி கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத் தில் மனுச் செய்த எதிராளிகள், அங்கு மனு நிராகரிக்கப்பட்டமையை அடுத்து, இப்போது திருகோணமலை மேல் நீதி மன்றத்தில் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

அந்த மனுவை நாளைமறுதினம் 11ஆம் திகதி புதன்கிழமை பரிசீலனைக்கு எடுக்க மேல் நீதிமன்றம் இன்று தீர்மா னித்தது.

இதன் காரணமாக இந்த விவகாரம் தொடர்பான வழக்கை திருகோணமலை நீதிவான் நீதிமன்றமும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

மேல் நீதிமன்றத்தில் எதிராளிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆயினும் வழக்காளி உட்பட ஏனைய தரப்பினர்களை அழைத்து அவர்களின் கருத்தையும் செவிமடுத்த பின்னர் பிணை குறித்து முடிவெடுப்பதற்காக வழக்கை நாளைமறுதினம் புதன்கிழமைக்கு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதி பதி நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லா ஒத்திவைத்தார்.

முன்னதாக இன்று காலை இந்த வழக்கு திருகோணமலை நீதிவான் நீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கின் எதிராளிகள் திருகோணமலை மேல் நீதிமன்றத்தை நாடி இருக்கின்றமை பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டது. அந்த மேல்நீதிமன்ற வழக்கின் வழிகாட்டலை கவனித்து நடவடிக்கை எடுப்பதற்காக திரு கோணமலை நீதிவான் நீதிமன்றமும் தனது வழக்கை இன்று மதியத்துக்கு ஒத்திவைத்தது.

பின்னர் மதியம் அளவில் இந்த வழக்கு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள் ளப்பட்ட சமயம், மேல் நீதிமன்றம் சம்பந் தப்பட்ட பிணை மனு விவகாரத்தை நாளைமறுதினம் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்திருப்பதாக மன்றுக்குத் தெரிவிக் கப்பட்டது.

திருகோணமலை மேல்நீதிமன்ற நீதி பதி இந்த விடயத்தில் வழங்கும் உத்தர வுக்கு அமைய வழிகாட்டல் நடவடிக்கை களை எடுப்பதற்காக வழக்கை அதே 11 ஆம் திகதிக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றமும் ஒத்திவைத்தது.

வழக்கு முடிந்து நீதிமன்றத்திலிருந்து பிக்குமார் உட்பட எதிராளிகள் விளக்க மறியல்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வேளையில், நீதிமன்றத்துக்கு முன்பாகக் கூடியிருந்த பிக்குமார் சிலரும், பொது மக்களும் அரசுக்கு எதிரான கோஷங் களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளி யிட்டனர்.

### யாழில்...

மற்றைய இளைஞர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிவுல் ஓயா திட்டம் மூலம் குடியேற்றங்கள் இல்லை!

## பிரதி அமைச்சர் உபாலி சத்தியம்

கிவுல் ஓயா திட்டத்தின் மூலம் வெளி மாவட்டங்களில் இருந்து புதிய குடியேற்றங்களைக் கொண்டுவரப்போவதில்லை என்றும், இந்தத் திட்டத்துக்குள் தமிழர்களையும் உள்வாங்குவதே தமது இலக்காக உள்ளது என்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் அரசால் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கிவுல் ஓயாத் திட்டம் 2007ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு, 2011ஆம் ஆண்டு முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. கடந்த காலகத்தில் ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய அனைவரும் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

துரதிஷ்டவசமாக இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் முறையாகக் காணப்படவில்லை. அதனால் இந்தத் திட்டத்தை முன்நகர்த்த முடியவில்லை.

இந்தத் திட்டம் கொழும்பில் இருந்து திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுவதால் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு அச்சங்கள் காணப்படுகின்றன.



1983ஆம் ஆண்டிலிருந்து நீர்ப்பாசனத் திட்டங்களைப் பயன்படுத்தி குடியேற்றங்கள் செய்யப்பட்டுள்ளமையால் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான அச்சம் ஏற்படுவது இயல்பானது. ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் நீர்ப்பாசனத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களில் வாழ்ந்த மக்கள், அங்கு வாழ முடியாது வெளியேறிவிட்டார்கள் என்பதுதான் யாதார்த்தமாகும்.

அவர்களின் வாழ்வாதாரத்துக்கான நீர் வசதிகள் இல்லாமையால் அவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். தற்போது கரைத்துறைப்பற்று, வவுனியா வடக்கு போன்ற பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் விவசாயம் செய்கின்றார்கள். அதேபோன்று ஜனகபுர உள்ளிட்ட பகுதிகளில் வாழும் சிங்கள மக்களும் விவசாயம் செய்கின்றனர். அவர்களின் வாழ்வாதாரத்தைக் கவனத்தில் கொண்டு தமிழ் மக்களையும் உள்ளீர்த்து நாம் கிவுல் ஓயா திட்டத்தை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இந்தத் திட்டத்தின் ஊடாக எவ்விதமான குடியேற்றங்களும் செய்யப்படமாட்டாது என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றேன்." - என்றார்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் வெடிபொருள்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நகர் பகுதியில் உள்ள வெற்றுக்காணிக்குள் இருந்து ஒரு தொகை வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையின் பின்புறமாக உள்ள பொன்னம்பலம் வீதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணியை நேற்று ஞாயிற்றுக்கிழமை துப்பரவு செய்த வேளை, துப்பரவுப் பணியாளர்கள் சந்தேகத்துக்கிடமான பொதி ஒன்றை அவதானித்தனர்.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் பொதி தொடர்பில் சோதனையிட்டனர்.

அதனுள் கைக்குண்டு, கலிபர் ரக துப்பாக்கி தோட்டாக்கள் காணப்பட்டன.



பொதியினுள் உள்ள வெடிபொருள்கள் தொடர்பில் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்த பின்னர், நீதிமன்ற உத்தரவுக்கமைய அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும், அதன் பின்னரே மீட்கப்பட்ட வெடிபொருள்கள் தொடர்பான தகவல்களை வெளியிட முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.




# செம்மணி புதைகுழிக்குள் இருந்து 90 ஆயிரம் லீற்றர் நீர் வெளியேற்றம்

## அடுத்த கட்ட அகழ்வுப் பணி குறித்து மார்ச் மாதம் 16ஆம் திகதி தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்குள் தேங்கி நின்ற மழை நீரை வெளியேற்றும் நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளை முன்னெடுக்க இருந்த நிலையில், கடந்த நவம்பர் மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் பல்வேறு தடவைகள் கடும் மழை பெய்ததமையால் , புதைகுழிக்குள் மழைநீர் தேங்கி நிற்கின்றது.

இந்நிலையில் புதைகுழிக்குள் தேங்கி நிற்கும் மழை நீரை வெளியேற்றும் நடவடிக்கை இன்று நல்லூர் பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது. அதன்போது சுமார் 90 ஆயிரம் லீற்றருக்கும் மேலான நீர் புதைகுழியில் இருந்து பவுசர் ஊடாக வெளியேற்றப்பட்டது.

மழை நீரை வெளியேற்றிய பின்னர் புதைகுழி சேற்றுத் தன்மையாக காணப்படுவதால், அடுத்த கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் எதிர் வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி தீர்மானிக்கப்படும் என முடிவெடுக்கப்பட்டு அன்றைய தினத்துக்கு வழக்கு திகதியிடப்பட்டது.

புதைகுழிக்குள் இருந்து வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கையை யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின்குமார், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான நிரஞ்சன், ஞா.ரஜித்தா உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் இன்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

அதேவேளை, மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக கடந்த ஆண்டு நீதி அமைச்சால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பியுள்ளமையால், இவ்வாண்டுக்குப் புதிய பாதீடு சமர்ப்பிக்கப்பட்டு, நிதியை மீளப் பெற வேண்டியுள்ளமையால், புதிய பாதீட்டை மன்றில் சமர்ப்பிக்க சட்ட வைத்திய அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# யார் சொல்வது உண்மை?

அரசுக்குள் இருந்து கொண்டே ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான கருத்துக்களை அரசுத் தலைவர்கள் தெரிவிக்கின்ற விடயத்தில் இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசும் முந்திய அரசுகளுக்கு சற்றும் குறைந்தது அல்ல என்றுதான் தோன்றுகின்றது.

அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பாக அரசுத் தலைவர் ஒன்றைக் கூற அரசுப் பேச்சாளர் சற்று வித்தியாசமாக ஒன்றைக் கூறுகிறார்.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. அதன் முதலாம், இரண்டாம் கட்டங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டன.

மூன்றாம் கட்டம் அடுத்த ஆண்டில் - 2027இல் - நடைமுறைக்கு வர வேண்டும்.

அதற்கு முன்னர் அரசு ஊழியர்களுக்கு எந்தச் சம்பள அதிகரிப்பும் - அலவன்ஸ் அதிகரிப்பும் கூட - வழங்கப்படவே மாட்டாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கண்டியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

எந்தத் தொழில் சங்கம் எந்தப் போராட்டத்தை நடத்தினாலும் - யார், எங்கு வீதிக்கு இறங்கினாலும் - இது விடயத்தில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை. சில சங்கங்கள் குறிப்பிடத்தக்க சம்பள உயர்வு அல்லது அலவன்ஸ் உயர்வை வலியுறுத்தி போராட்டங்களுக்கு முஸ்தீபு செய்து வருகின்றன. ஆனால் அவை எவையும் வழங்கப்பட மாட்டா என்பதை மிக உறுதியாகக் கூறி வைக்கிறேன்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பின் மூன்றாவது கட்டத்தை அடுத்த ஆண்டில் நடைமுறைக்கு கொண்டு வந்த பின்னர், வரவு - செலவு திட்ட விடயங்கள், நாட்டின் நிதி நிலைமை ஆகியவற்றை கவனத்தில் எடுத்து மட்டுமே சம்பள உயர்வு பற்றி அப்போது பரிசீலிக்கப்படும், இப்போதல்ல என்று தெளிவாகவும் உறுதியாகவும் திட்டவட்டமாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கூறிவிட்டார்.

ஆனால் அரசின் அமைச்சரவையின் உத்தியோகபூர்வ பேச்சாளர் வேறு விதமாக கதை விடுகிறார்.

அரச சேவையை வலுப்படுத்தும் நோக்கில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவும், அவர்களுக்கான வசதிகளை மேம்படுத்தவும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது என சுகாதார மற்றும் வெகுசன ஊடகத் துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஹொரண மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கும் அவர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கும் எமது அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகின்றது என்றும் அவர் உறுதிபடக் கூறினார்.

இது விடயத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஒன்றைக் கூற, அதற்கு மாற்றான கருத்தை அரசுப் பேச்சாளர் குறிப்பிடுகின்றார். உண்மையில் இவ்விவகாரத்தில் மக்கள் காதில் பூச்சுற்றுபவர் யார்? ஜனாதிபதியா? அல்லது அமைச்சரவைப் பேச்சாளரா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்....!

## மருத்துவச் சான்றிதழ்கள் இன்றி

# வெதுப்பக உணவு விற்றோருக்கு எதிராக நடவடிக்கை முன்னெடுப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

தனிநபர் சுகாதாரம், மருத்துவ சான்றிதழ் இன்றி வெதுப்பக உணவுகளை விற்பனை செய்த 11 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர் கஜானன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் ஓட்டோகளில் வெதுப்பக உணவு வகைகளை விற்பனை செய்துவரும் 11 நபர்களுக்கு



எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று களுவாஞ்சிகுடி பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் கஜானன் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் வெதுப்பக உரிமையாளர்கள் மற்றும் விசேட கலந்துரையாடல் ஒன்று பிரதேச சபையில் இடம்பெற்றது. அதன்போது அனைத்து வெதுப்பக உரிமையாளர்களுக்கும் தேவையான அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தன. அந்த ஆலோசனைகளை அவர்கள் மீறி இவ்வாறு செயற்பட்டதன் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர் கஜானன் மேலும் தெரிவித்தார்.





# நீர்த் தேங்கித் துர்நாற்றம் வீசும் களுவாஞ்சிக்குடி பஸ் நிலையம்

## அதிகாரிகள் அசமந்தப்போக்கு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட களுவாஞ்சிக்குடி பிரதான வீதியில் அமைந்துள்ள பிரதான பஸ் தரிப்பு நிலையம் குன்றும் குழியுமாக மழை நீர் தேங்கி துர்நாற்றம் வீசி வருவதால் பயணிகளும் அப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் வியாபாரிகளும், மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த பஸ் தரிப்பு நிலையத்துக்கு அருகாமையில், பொலிஸ் நிலையம், வலயக் கல்வி அலுவலகம், கோட்டக்கல்வி அலுவலகம், நீதிமன்றம், பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயம், தேசிய பாடசாலை, மற்றும் பல்வேறு கடைத்தொகுதிகளும் காணப்படுகின்றன.

இந்த நிலையில், சுகாதாரச் சீர்கேடாகக் காணப்படும் இந்த பஸ் தரிப்பு நிலையத்தை சம்மந்தப்பட்டவர்கள் இதுவரையில் கருத்தில் கொள்ளாமலிருப்பது மிகுந்த கவலையளிக்கிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

துர்நாற்றம் வீசும் இந்த பஸ் தரிப்பு நிலையத்தைச் சீர் செய்து சுற்றாடலைப் பாதுகாப்பதோடு, பயணிகளின் ஆரோக்கியம் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கச் சம்பந்தப்பட்டவர்கள் முன் வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# காணி அளிப்புப் பத்திரங்கள் அட்டாளைச்சேனையில் வழங்கல்





(எம்.எப்.எம்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரச காணிகளில் நீண்ட காலமாகக் குடியிருந்தும், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருபவர்களின் காணிகளுக்கும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.சி. அஹமட் அப்கர் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கணக்காளர் எம் எப். பர்ஹான், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர் நிர்வாக உத்தியோகத்தர், கே வி. சலீம், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம். ஐ. எம். அஸ்வர், காணி உத்தியோகத்தர் எம். ஐ. எம். றியாத், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ. எம். சுரையா, விடய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# நீர் வழிந்தோடும் கால்வாயில் குப்பை கூழங்களால் துர்நாற்றம்

**(பாறுக் ஷிஹான்)**

காரைதீவு கண்ணகி அம்மன் கோவில் அருகில் உள்ள நீர் வடிந்தோடும் கால்வாய் குப்பை கூழங்களால் நிரம்பி காணப்படுகின்றது.

அம்பாறை – கல்முனை பிரதான வீதியின் இரு மருங்கிலும் உள்ள நீர் ஓடும் கால்வாய்களே இவ்வாறு குப்பை கூழங்கள்களால் நிரம்பி வழிகின்றன.

இதனால் இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் அந்தப் பகுதியால் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தக் கால்வாயில் பியர் ரின்கள், பிளாஸ்டிக் கலன்கள் உள்ளிட்ட திண்மக் கழிவுகள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர தேங்கி நிற்கும் நீர் நிலையால் டெங்கு போன்ற நோய்களும் பரவுவதற்கு காரணமாக அமைகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நீர் ஓடும் கால்வாய்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் துப்பரவு செய்யப்பட்டு வருகின்ற போதிலும் காரைதீவு பகுதியில் இன்னும் அந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.






# பிள்ளைகளை நல்வழி நடக்கக்கோரும் பெற்றோர் தாங்கள் அவ்வழியில் சென்று வழிகாட்ட வேண்டும்

## பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு




பெற்றோர்களுக்குத் தற்போதைய சூழலில் பிள்ளைகளை வளர்ப்பது பெரும் சவாலாக உள்ளது. தங்கள் பிள்ளைகள் கெட்டுப் போய்விடக் கூடாது என்பதற்காக ‘அதைச் செய்யாதே இதைச் செய்யாதே’ என்று தினமும் அறிவுரைகளால் பிள்ளைகளை வழி நடத்த முயலுகிறார்கள். ஆனால், இன்றைய பிள்ளைகள் பெற்றோர்கள் சொல்லுவதையல்ல செய்வதையே செய்கிறார்கள். பிள்ளைகளை நல்வழி நடக்கக்கோரும் பெற்றோர்கள் சொல்லால் அல்ல செயலால் காட்டவேண்டும். முதலில் தாங்கள் அவ்வழியில் சென்று காட்டவேண்டும். பெற்றோர்கள் எவ்வழியோ, பிள்ளைகளும் அவ்வழியிலேயே என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பசுமை இயக்கத்தின் மாணவர்களை வலுவூட்டும் ‘பசுமை அறிவொளி’ நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெற்றது. நூற்றுக் கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

மாணவர்களிடையே தவறான பழக்கவழக்கங்கள் அதிகரித்து வருகின்றன. பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் கீழ்ப்படியாத போக்குத் தலைதூக்கியுள்ளது. வன்முறைகளில் ஈடுபடுகிறார்கள், போதைப் பொருள் பாவனைக்குக்கூட அடிமையாகி வருகிறார்கள். இந்த இளம் தலைமுறையை இவ்வாறு செல்ல அனுமதிக்க முடியாது. இது சம்பந்தப்பட்ட அந்த ஒரு மாணவரை மட்டுமல்ல அவரது குடும்பத்தை மட்டுமல்ல எமது ஒட்டுமொத்தச் சமூகத்தின் எதிர்காலத்தையுமே படுகுழிக்குள் தள்ளிவிடும்.

எனவே, எம் மாணவர்களை நல்வழியில் நடைபோட வைக்க சகல தரப்பினரும் முனைய வேண்டும். இதில் பாடசாலைகளைவிடப் பெற்றோருக்கே பெரும் பங்கு உள்ளது.

எந்தவொரு பெற்றோருக்கும் தங்கள் பிள்ளைகளைக் குறை சொல்வதற்கு மனம் ஒப்பாது. தங்கள் பிள்ளைகளின் தவறான பழக்கங்களுக்கு அவர்களின் நண்பர்களையே குற்றம் சாட்டுவார்கள். தவறானவர்களின் சேர்கையினாலேயே தம்முடைய பிள்ளைகளும் பழுதானதாகச் சொல்லுவார்கள். மாணவர்கள் பாடசாலைகளில் செலவிடும் நேரத்தைவிட, நண்பர்களுடன் செலவிடும் நேரத்தைவிட, பெற்றோர்களுடன் செலவிடும் நேரமே அதிகம். பிள்ளைகளின் நடத்தைகளில் தங்களுக்கே பெரும் பங்கு என்பதை மறந்துவிட்டு, மற்றவர்களால்தான் தங்கள் பிள்ளைகள் கெட்டது என்று சொல்லுவது தங்களைப் பொறுப்புக்கூற விரும்பாத ஒருவகை உளவியல் தப்பிதம்.

வீடுதான் பிள்ளைகளின் முதல் பாடசாலை. பெற்றோர்தான் பிள்ளைகளின் முதல் ஆசிரியர். பெற்றோர்தான் பிள்ளைகளின் முன்னுதாரணம். பெற்றோர் எதைச் செய்கிறார்களோ, பிள்ளைகளும் பிரதிசெய்யும் இயந்திரம் போல அதையே செய்வார்கள். பெற்றோர் புகைப்பிடித்தால், மது அருந்தினால், பொய் பேசினால், தங்களுக்கு இடையில் வாக்குவாதங்களில் ஈடுபட்டால் பிள்ளைகளும் அவற்றையேதான் பிரதிபலிப்பார்கள். இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, பிள்ளைகள் எவ்வாறு வளரவேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புகிறார்களோ அவ்வாறு தாங்களே வாழ்ந்து வழிகாட்டவேண்டும்.– என்றார்.



# பனங்காடு பிரதேச வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முடிவு

(நூருல் ஹுதா உமர்)

பனங்காடு பிரதேச வைத்திய சாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மருத்துவச் சேவைகளை மேலும் மேம்படுத்துவது தொடர்பான விசேட கலந் துரையாடல் ஒன்று, கடந்த சனிக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்ற இக்கலந் துரையாடலில், வைத்தியசாலையின் தற்போதைய நிலைமை, சேவை வழங்கலில் காணப்படும் சவால்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரி வின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர், பிராந்திய மருத்துவ ஆய்வுகூட பொறுப்பு வைத்திய அதி காரி டாக்டர் எம்.எச். றிஸ்பின் ஆகியோர் கலந்துகொண்டு, தங்களது தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் பரிந்துரை களை முன்வைத்தனர்.

பனங்காடு பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழு சார்பில் வைத்திய சாலை பொறுப்பு வைத்திய அதிகாரி எம். தனோர்ஷன், டாக்டர் திருமதி சித்ரா தேவராஜன், ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாளர் வீ. பாபாகரன் உள்ளிட்ட அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் போது, வைத்தியசாலை யின் எதிர்கால கட்டமைப்பு அபிவிருத் திகள், புதிதாக முன்னெடுக்கப்பட வேண் டிய வேலைத் திட்டங்கள், நிர்வாக மற்றும் வளப் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகள், நீண்டகால தேவைகள் மற்றும் நோயாளிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் ஆகியவை அபி விருத்திக் குழுவால் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, முன்வைக் கப்பட்ட கோரிக்கைகளை பரிசீலித்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர், அவற்றில் சிலவற்றுக்கு உட னடித் தீர்வுகளை வழங்கியதுடன், ஏனைய அபிவிருத்திப் பணிகளை துரிதப் படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று உறுதியளித் தார்.

# அட்டாளைச்சேனை பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு!





(நவாஸ்)

அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயம் மற்றும் மீனோடைக் கட்டு டாக்டர் ஜலால்டீன் வித்தியாலயம் என்பவற்றின் நீண்டகாலத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், அரசின் இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் அட்டாளைச் சேனை இணைப்பாளர் எஸ்.எம்.றியாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பா வாவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமை யவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், அட்டாளைச் சேனை அந்-நூர் மகா வித்தியாலயத் துக்கு 9 மில்லியன் ரூபாவும், டாக்டர் ஜலால்டீன் வித்தியாலயத்துக்கு 7 மில்லி யன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த நிதி, பாடசாலைகளின் கட்டடங்களைப் புனரமைப்பதற்கும், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய 'ஸ்மார்ட் வகுப்பறை' திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் இணைப்பா ளர் எஸ்.எம்.றியாஸ், கிராமிய அபி விருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸவின் இணைப்பாளர் சுல் தான் சத்தார், அட்டாளைச்சேனை 8 மற்றும் 9 ஆகிய பிரிவுகளின் பிரஜா சக்தி தலைவர்களான வஹாப் நிசாட், எம்.ஐ.தௌபீக் உள்ளிட்டோர் அண்மை யில் குறித்த பாடசாலைகளுக்கு விஜயம் செய்து, பாடசாலை அபிவிருத்தி தொடர் பில் அதிபர்களுடன் கலந்துரையாடி னர்.



# அம்பாறை சுற்றுலாத் தொடர்பில் ஒருங்கிணைப்பு உப குழுக் கூட்டம்!



(அபு அலா)

அம்பாறை மாவட்ட சுற்றுலா ஒருங்கிணைப்பு உப குழுக்கூட்டம் மாவட்ட சுற்றுலா ஒருங்கிணைப்பு உப குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன தலைமையில் இன்று மாவட்ட செயலக கேட்போர் மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான திட்டங்கள் மற்றும் அவர்களைக் கவரும் வகையில் சுற்றுலாப் பிரதேசங்களை அழகுபடுத்தல் தொடர்பாக இக்கூட்டத்தில் மிக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ்.அப்துல் வாசித், அஷ்ரஃப் தாஹிர், கே.கோடீஸ்வரன், அபூபக்கர் ஆதம்பாவா, உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கோமாரி வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணம் வழங்கல்

## பிரான்ஸ் மாநகர சபை உறுப்பினர் சுகுர்ணா மார்க்கண்டு உதவி



( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கைக்கு வருகை தந்திருந்த பிரான்ஸ் நாட்டின் லகர்நோப் 93 மாநகர சபையின் உறுப்பினர் சுகுர்ணா மார்க்கண்டு, கோமாரி வைத்தியசாலைக்கு மருத்துவ உதவிப் பொருள்களை வழங்கி வைத்தார்.

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச சபைக்கு உட்பட்ட கோமாரி வைத்தியசாலைக்கு பெறுமதிமிக்க மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வைத்திய சாலை பொறுப்பு வைத்தியர் மருத்துவர் ஆகில் அகமட் ஷரிபுதீன், மருத்துவர் ஏஏ.ஷரிபுதீன் மற்றும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டது.




# தேசிய ரீதியில் சாதனை படைத்த மன்னார் வீரர்களுக்கு வரவேற்பு!

(எஸ்.ஆர்.லெம்பேட்)

தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் 20 வயது ஆண்கள் பிரிவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி 2 ஆம் இடத்தைப் பெற்ற நிலையில் குறித்த வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை இடம் பெற்றது.

தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உதைப்பந்தாட்ட இறுதி போட்டியில் 20 வயது ஆண்கள் பிரிவில் மன் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மற்றும் கொழும்பு ஹமீட் அல் ஹுசேனியா அணிகள் மோதிய போட்டியில் ஹமீட் அல் ஹுசேனியா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது .

இப்போட்டியில் மன்னார் புனித. சவேரியார் ஆண்கள் கல்லூரி அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வட மாகாணத்துக்கும் மன்னார் மாவட்டத்துக்கும் பாடசாலைக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர்.

இந்த விளையாட்டு வீரர்களை வரவேற்றுக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் மன்னார் பஸ் நிலைய பகுதியில் இடம்பெற்றது.

இதன் போது பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் சந்தியாகு தலைமையில் குறித்த வீரர்கள் மாலை அணிவிக்கப்பாட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த வீரர்கள் ஊர்வலமாக பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நிகழ்வில் மன்னார் நகர பிரதேச செயலாளர், வலயக்கல்வி பணிப்பாளர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# தி.மு.க. அரசை மகளிருக்கான அரசாக முதல்வர் ஸ்டாலின் நடத்தி வருகிறார்

## துணை முதல்வர் உதயநிதி பாராட்டு



தி.மு.க. அரசை மகளிருக்கான அரசாக முதல்வர் ஸ்டாலின் நடத்தி வருகிறார் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி சார்பில் துறைமுகம் சட்டப்பேரவை தொகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே துணை முதல்வர் உதயநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முந்தைய 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் இந்த வடசென்னை பகுதி எப்படி இருந்தது, இந்த 5 ஆண்டு கால தி.மு.க. அரசில் எந்த அளவுக்கு வடசென்னை முன்னேறியிருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

வட சென்னையை வளர்ந்த சென்னையாக மாற்ற சுமார் 8,000 கோடி இந்திய ரூபாவில் 'வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை' முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். அதன் ஒரு பகுதியாகத்தான் இதுபோன்ற பொது மக்களுக்குப் பயன்படும் திருமண மண்டபங்களைக் கட்டித் திறந்து வைத்திருக்கிறோம். இதைத் தொடர்ந்து வடசென்னையில் பேருந்து நிறுத்தங்கள், படிப்பகங்கள் என்று ஏராளமான கட்டமைப்புகளை முதல்வர் கொடுத்திருக்கிறார்.

தி.மு.க. அரசு அமைந்ததில் இருந்து முதல்வர் ஸ்டாலின் மகளிருக்கான அரசாக நடத்தி வருகிறார். அவரது முதல் கையெழுத்து மகளிர் விடியல் பயணம் திட்டத்துக்குதான். பள்ளி குழந்தைகளுக்கு சமையல் செய்து கொடுத்தும் அனுப்பும் மகளிரின் சுமையை போக்க காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இன்று ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் பயனடைகின்றன.

அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்வி செல்லும் மாணவிகளுக்கு, புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம் 1,000 இந்திய ரூபா கல்வி ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இதற்கெல்லாம் மகுடம் வைத்தது போன்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம், ஒவ்வொரு மாதமும் 1.30 கோடி மகளிருக்கு மாதம் 1,000 இந்திய ரூபா வழங்கப்படுகிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் தொடர வேண்டும். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைக்கப் போவது உறுதி. இந்த திராவிட மொடல் அரசு தொடர நீங்கள் அனைவரும் நம்முடைய அரசுக்கும், கழகத் தலைவருக்கும் ஆதரவாக இருக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

# தேசிய ஜனநாயக கூட்டணிக்கு புதிய கட்சிகள் வரும் வாய்ப்பு

## நயினார் நாகேந்திரன் தகவல்



தேசிய ஜனநாயக கூட்டணிக்கு புதிய கட்சிகள் வர வாய்ப்புள்ளதாக பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. விளையாட்டுப் பிரிவு சார்பில் சேலத்தில் நேற்று நடைபெற்ற மாரத்தான் போட்டியை தொடங்கிவைத்த நயினார் நாகேந்திரன், பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"மலேசியாவில் பிரதமர் மோடி பேசும்போது, இந்தியாவில் எத்தனையோ மாநிலங்கள் இருந்தாலும், தமிழகத்தின் கலாச்சாரம், பண்பாடு 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது.

நாட்டின் வளர்ச்சிக்கு தமிழர்கள் அதிக பங்களிப்பை அளித்து வருகிறார்கள் என்று பெருமைப்படுத்தி பேசியுள்ளார். தமிழையும், தமிழின் பெருமையையும் பிரதமர் மோடி தொடர்ந்து உலக அரங்கில் எடுத்துக் கூறி வருகிறார்.

ஆனால், தமிழக முதல்வர் ஸ்டாலின் மட்டும்தான் பிரதமர் மோடி ஒன்றுமே செய்யவில்லை என்று கூறிக் கொண்டிருக்கிறார். மதுரையில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார்.

ஏற்கெனவே மதுராந்தகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் மாநாடு போல நடந்தது. தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பெரும் எழுச்சி ஏற்பட்டுள்ளது. மக்கள் மனதிலும் மாற்றம் வந்திருக்கிறது. எனவே, ஆட்சி மாறப்போவது நிச்சயம்.

பா.ஜ.கவுக்கு ஆதரவு தரக்கூடிய அமைப்புகள், சமுதாய அமைப்புகளிடம் பேச மட்டுமே குழு அமைக்கப்பட்டுள்ளது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் புதிய கட்சிகள் இணைய வாய்ப்புள்ளன. கருணாநிதி முதல்வராக இருந்தபோது, தி.மு.கவினர் இந்திராகாந்தி உள்ளிட்ட பெண்களை இழிவுபடுத்திப் பேசினர்.

பின்னர் தி.மு.க. ஆட்சிக்கு வர முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. அதேபோல, தற்போதும் தி.மு.கவினர் பேசி வருவதால், தி.மு.க. இனி ஆட்சிக்கு வராது. தேர்தல் நெருங்கும் சூழலில், அவசரகதியில் கோயில்களுக்கு கும்பாபிஷேகங்களை நடத்தி வருகின்றனர்." என்று தெரிவித்தார்.

# விஜய் பங்கேற்கும் நிர்வாகிகள் சந்திப்பு சேலத்தில் 13 ஆம் திகதி நடைபெறுகிறது

சேலத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி சீலநாயக்கன்பட்டியில் உள்ள தனியார் மைதானத்தில் த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் நடத்த பொலிஸார் நேற்று அனுமதி வழங்கினர்.

இதுகுறித்து த.வெ.க. மாநகர் மாவட்ட செயலாளர் பார்த்திபன் செய்தியாளர்களிடம் குறிப்பிடுகையில்,

"சேலத்தில் மக்கள் சந்திப்பு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்த நிலையில், கால அவகாசம் இல்லாததால்



நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்துக்கு அனுமதி கேட்கப்பட்டது. த.வெ.க. நிர்வாகிகள் கூட்டத்தில் 5,000 பேர் பங்கேற்ற பொலிஸ் அனுமதி வழங்கியுள்ளது. இதில் விஜய் கலந்து கொள்கிறார்.

அதிக கூட்டம் கூடாமல் விஜய்யின் பேச்சை பொதுமக்கள் தொலைக்காட்சியில் பாருங்கள். பொலிஸுக்கு ஒத்துழைப்பு கொடுத்து கூட்டம் நடைபெறும் இடத்தில் 5 ஆயிரம் பேர் மட்டுமே வர வேண்டும். அனுமதி இல்லாதவர்கள் வரவேண்டாம்.

51 நிபந்தனைகளுடன் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா நிபந்தனைகளும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக உள்ளன. மதியம் 12 மணி முதல் மாலை 3 மணி வரை கூட்டம் நடைபெறும்." என்று தெரிவித்துள்ளார்.

# அமைதிக்கான நோபல் பரிசு வென்ற நர்கீஸ் முகமதிக்கு சிறைத்தண்டனை



ஈரானின் புகழ்பெற்ற மனித உரிமை ஆர்வலரும், அமைதிக்கான நோபல் பரிசு வென்றவருமான நர்கீஸ் முகமதிக்கு ஈரானிய நீதிமன்றம் மேலும் ஏழரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இந்த தீர்ப்பின் மூலம், நர்கீஸ் முகமதிக்கு இதுவரை விதிக்கப்பட்டுள்ள மொத்த சிறைத்தண்டனை காலம் 44 ஆண்டுகளாக அதிகரித்துள்ளதாக அவரை ஆதரிக்கும் 'நர்கீஸ் அறக்கட்டளை' தெரிவித்துள்ளது.

ஈரானின் மஷாட் நகரில் உள்ள நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

சதித் திட்டம் தீட்டியமைக்கு 6 ஆண்டுகள் சிறையும் அரசுக்கு எதிரான பிரசாரம் மேற்கொண்டமைக்காக 1.5 ஆண்டுகள் சிறையும் விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகள் வெளிநாடு செல்லத் தடை மற்றும் இரண்டு ஆண்டுகள் ஈரானின் கிழக்கு பகுதிக்கு நாடு கடத்தல் தண்டனை என்பனவும் இவற்றில் உள்ளடங்கும்.

53 வயதான நர்கீஸ் முகமதி, கடந்த பிப்ரவரி 2 ஆம் திகதி முதல் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

உடல்நிலை மோசமடைந்ததால் மூன்று நாள்களுக்கு முன்னர் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார், பின்னர் மீண்டும் தடுப்பு மையத்திற்கு கொண்டு வரப்பட்டார்.

"இந்த நீதித்துறை சட்டவிரோதமானது என அவர் நம்புகிறார். அதனால் அவர் நீதிமன்றத்தில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை, எந்த ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை." என அவரது கணவர் தகி ரஹ்மானி தெரிவித்துள்ளார்.

ஈரானில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகப் போராடியதற்காக 2023 இல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஏற்கனவே 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் கழித்துள்ள அவர், கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஒரு நினைவு அஞ்சலி கூட்டத்தில் தூண்டல் கருத்துக்களை வெளியிட்டதாகக் கூறி மீண்டும் கைது செய்யப்பட்டார்.

அந்த கைதின் போது அவர் ஈரானிய பாதுகாப்புப் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார் என அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.



# ஒபரேஷன் சிந்தூரில் சேதமடைந்த விமானப் படை தளங்கள் சீரமைப்பு

காஷ்மீரின் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தான் தீவிரவாத முகாம்கள், இராணுவ மற்றும் விமானப்படை தளங்கள் மீது ஒபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இதில் பாகிஸ்தானில் உள்ள போஹ்லாரி விமானப்படை தளத்தின் விமான நிறுத்தும் இடம் பலத்த சேதமடைந்தது.

இந்நிலையில், அப்பகுதியை சீரமைக்கும் பணிகளில் பாகிஸ்தான் விமானப் படை ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறிப்பாக, ஜனவரி 28 அன்று எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படங்களின் படி, சேதமடைந்த ஹேங்கரின் (விமான நிறுத்தும் இடம்) பச்சை நிறக் கூரையின் சில பகுதிகள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இது அந்த இடத்தைச் சீரமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலையாகக் கருதப்படுகிறது.

அந்தப் புதிய புகைப்படம், அந்த கட்டிடம் கைவிடப்பட்ட நிலையில் இருந்து மாற்றமடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகிறது. இதேபோன்ற சீரமைப்புப் பணிகள் முரிட், சுக்கூர் மற்றும் நூர்கான் ஆகிய விமானப் படை தளங்களிலும் நடைபெற்று வருகின்றமை செயற்கைக்கோள் புகைப்படங்கள் மூலம் தெரியவந்துள்ளது.




# ஜப்பான் நாடாளுமன்ற தேர்தலில் லிபரல் ஜனநாயகக் கட்சி வெற்றி

### *வாழ்த்து மழையில் பிரதமர் சனே டகாய்ச்சி*

ஜப்பான் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் அந்த நாட்டு பிரதமர் சனே டகாய்ச்சி தலைமையிலான லிபரல் ஜனநாயகக் கட்சி அபார வெற்றி பெற்று ஆட்சியை மீண்டும் பிடித்துள்ளது.

இந்நிலையில், சனே டகாய்ச்சிக்கு உலக நாடுகளை சேர்ந்த தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

ஜப்பான் நாடாளுமன்ற கீழவை பிரதிநிதிகள் சபையில் உள்ள 465 இடங்களுக்கான இந்த தேர்தல் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் 316 இடங்களில் பிரதமர் சனே டகாய்ச்சி தலைமையிலான லிபரல் ஜனநாயகக் கட்சி வென்றது.

இதை ஜப்பான் நாட்டின் செய்தி நிறுவனமான என்ஹெச்கே உறுதி செய்துள்ளது. ஆட்சி அமைக்க 233 இடங்கள் தேவை என்ற சூழலில் எல்.டி.பி. அபார வெற்றி பெற்றுள்ளது.

தற்போது எல்.டி.பி. மற்றும் அதன் கூட்டணி கட்சியான ஜப்பான் இன்னோவேஷன் கட்சியும் நாடாளுமன்ற கீழவையில் 3இல் 2 பங்குக்கும் கூடுதலான இடங்களை பெற்றுள்ளது. இதனால் நாடாளுமன்ற மேலவையிலும் பிரதமர் சனே டகாய்ச்சி ஆதிக்கம் செலுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பான் நாடாளுமன்ற கீழவைக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடப்பது வழக்கம். இருப்பினும் ஆட்சியில் உள்ள கட்சியினர் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி தேர்தலை முன்கூட்டியே அறிவித்து வெற்றி பெறுவர். அந்தவகையில் கடந்த ஒக்டோபர் மாதம் ஜப்பான் நாட்டின் முதல் பெண் பிரதமராக பிரதமர் சனே டகாய்ச்சி பொறுப்பேற்றார்.

இந்நிலையில், அண்மையில் நாடாளுமன்றத்தை கலைத்து, தேர்தல் அறிவித்தார். இந்த சூழலில் தேர்தலில் அவரது கட்சி அபார வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, கடந்த 2024 தேர்தலில் எல்.டி.பி. கட்சி பெரும்பான்மை பெறவில்லை. இருப்பினும் கூட்டணி ஆதரவுடன் அக்கட்சியின் சார்பில் பிரதமராக ஷிகெரு இஷிபா ஆட்சி அமைத்தார். கடந்த ஆண்டு அவர் பதவியில் இருந்து விலகினார். அதன் பின்னர் சனே டகாய்ச்சி பிரதமர் ஆனார்.

எல்.டி.பி. கட்சியின் வெற்றி காரணமாக ஜப்பானில் நிலையான ஆட்சி மற்றும் அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வகையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உள்ளிட்டோர் ஜப்பான் பிரதமர் சனே டகாய்ச்சிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



# கனடா முரசு

திங்கட்கிழமை | 09/02/2026

## டொரண்டோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

டொரண்டோவின் ரெக்ஸ்டேல் பகுதியில் உள்ள வுட்பின் வணிக வளாகத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 30 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார். 03





# காணொலி பதிவு செய்து தொந்தரவு; டொராண்டாவில் இலங்கையர் கைது

டொராண்டோ நகரம் முழுவதும் பல சம்பவங்களில் மக்களை காணொலி பதிவு செய்து தொந்தரவு செய்தார் என கூறப்படும் குற்றவியல் தொந்தரவு விசாரணையைத் தொடர்ந்து இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என டொராண்டோ பொலிஸ் தெரிவித்துள்ளது.

2025 ஜூன் 8 ஆம் திகதி டுன்டாஸ் மற்றும் டுப்ரீன் வீதி பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த ஒரு பெண், தன்னை ஒருவர் படம் பிடித்தமையை கவனித்துள்ளார் என கூறப்பட்டுள்ளது.

அவர் படம் எடுக்க வேண்டாம் என்று தெரிவித்த போது, அந்த நபர் எதிர்மறையாக நடந்துகொண்டமையுடன், தொடர்ந்து தொந்தரவு செய்தார் எனவும் அங்கு இருந்த பாதுகாப்பு பணியாளர்கள் வெளியேறுமாறு கூறியபோதும் மறுத்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02

# கிளின்டன் நகரின் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் மரணம்

கனடாவின் கிளின்டன் நகரின் வடபகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 38 வயது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் சுமார் 2 மணியளவில் லொப் வீதி மற்றும் டச் லைன் வீதிகளுக்கு இடை யில் இரண்டு வாகனங்கள் மோதின என அவசர அழைப்பு பிரிவிற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் ஒரு வான் மற்றும் ஒரு பிக்கப் லொறியும் மோதிக் கொண்டன என பொலிஸார்





# பாடசாலைக்கு மிரட்டல் விடுத்த 14 வயது சிறுவன் ஒருவர் கைது

கனடாவின் ஓஷாவா நகரில் உள்ள ஒரு பாடசாலை ஒன்றுக்கு விடுக்கப்பட்ட துப்பாக்கி சூடு மிரட்டல் அழைப்பு தொடர்பில் 14 வயது சிறுவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த தொலைபேசி அழைப்பு விளையாட்டாக மேற்கொள்ளப்பட்டது என்பது விசாரணைகளில் உறுதியாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் சுமார் 2 மணியளவில் ஹார்மனி ஹைட்ஸ் பொதுப் பாடசாலைக்கு மிரட்டல் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த மிரட்டலை தொடர்ந்து முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் வளாகத்தில் எவ்வித பாதுகாப்பு அச்சமும் இல்லை என அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 14 வயது சிறுவன் மீது குற்றவியல் தொந்தரவு, சொத்து சேதம் மற்றும் பிறரின் உயிர் பாதுகாப்பை ஆபத்துக்கு உள்ளாக்குதல் உள்ளிட்ட பல குற்றச் சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

“இவ்வாறான சம்பவங்கள் கேலிக்குரியவை அல்ல. அவை மக்களிடையே பயத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் உண்மையான அவசர நிலைகளில் செலுத்த வேண்டிய கவனத்தை திசை திருப்புகின்றன.” என பொலிஸ் அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

## கிளின்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றனர்.

வானில் பயணித்த இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட நால்வரும் காயமடைந்த நிலையில், மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்களில் 38 வயதுடைய எக்சிட்டர் பகுதியைச் சேர்ந்த பெண் பின்னர் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டது. வானில் இருந்த ஆண் தீவிர காயங்களுடன் தொடர்ந்து மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இரண்டு குழந்தைகளுக்கும் லேசான காயங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிக்கப் லொறி ஓட்டுநரும் லேசான காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பான விசாரணையை ஒன்டாரியோ மாகாண பொலிஸ் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

சம்பவம் தொடர்பான தகவல் அல்லது காணொலி காட்சிகள் இருப்பவர்கள் பொலிஸிடம் அந்த தகவல்களை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குப் பின்னர் பல மணி நேரங்கள் வீதி மூடப்பட்டிருந்தது. பின்னர் அது மீண்டும் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டது.

## காணொலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பெலிஸ் அழைக்கப்பட்டதும், குற்றச்சாட்டுக்குரிய நபர் அந்த இடத்தை விட்டு சென்றுள்ளார் எனவும் கூறப்படுகிறது. இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

அதே நபர் 2025 ஆண்டு ஓகஸ்ட் 21ஆம் திகதி பிற்பகல் சுமார் 2.45 மணியளவில் ரி.ரி.சீ ஊழியரை அணுகி, அவரின் முகத்திற்கு அருகில் கையடக்கத்தொலைபேசியை வைத்து படம் பிடித்தமையுடன், அவரின் இனத்தை குறிவைத்து அவமதிப்பான கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார் எனவும் பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த சம்பவத்திலும் காயம் எதுவும் பதிவாகவில்லை. மேலும், 2025 ஆம் திகதி செப்டம்பர் 27ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் டேவிட் பீஸ் கட்சதுக்கத்தில் வரிசையில் நின்றிருந்த ஒருவரை படம் பிடித்தபோது, நிறுத்துமாறு கேட்டபோதும் அவர் மேலும் அருகில் வந்து எதிர்மறையாக நடந்து கொண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்காவது சம்பவமாக, 2025 மே 26ஆம் திகதி யோங் மற்றும் சுட்டர் வீதிப் பகுதியில் பணியில் இருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தரை அணுகி, அவரது தோற்றம் குறித்து கருத்துக்கள் தெரிவித்து படம் பிடித்துள்ளார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதே அதிகாரியை 2025 ஆம் ஒக்டோபர் 4ஆம் திகதி யோங் மற்றும் டுன்டாஸ் பகுதியில் மீண்டும் அணுகி, இதேபோன்ற கருத்துக்களை கூறினார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அனைத்து சம்பவங்களிலும் உடல் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி டொராண்டோவைச் சேர்ந்த 45 வயதுடைய மொஹமட் அஸ்கர் மொஹமட்-ரசிக் கைது செய்யப்பட்டு, நான்கு குற்றவியல் தொந்தரவு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.



# வாகன நிறுத்துமிடத்தில் ஜி.பி.எஸ். மீட்பு; ஒன்டாரியோவின் பாரி நகரில் எச்சரிக்கை

ஒன்டாரியோ மாகாணத்தின் பாரி நகரில் உள்ள றோயல் விக்டோரியா மருத்துவமனை வாகன நிறுத்துமிடத்தில் இரண்டு வாகனங்களில் ஜி.பி.எஸ். கண்காணிப்பு சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாரி பொலிஸ் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர்கள் தங்களது கையடக்கத் தொலைபேசிகளில் வந்த எச்சரிக்கை அறிவிப்பின் மூலம் 'ட்ராக்கர்' சாதனங்கள் அருகில் இருப்பதை அறிந்துள்ளனர் என பாரி பொலிஸ் பிரிவின் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்துறை அதிகாரியான கிரிஸ்டைன் போஹ்லர் தெரிவித்துள்ளார்.

“வாகனத்தை இயக்கிக் கொண்டிருந்தபோது, ஒரு கண்காணிப்பு சாதனம் மிகவும் அருகில் உள்ளது என அவர்களுக்கு செல்போன் மூலம் எச்சரிக்கை வந்துள்ளது.

பின்னர் விரிவாகச் சோதித்தபோது, வாகனத்தில் 'ட்ராக்கர்' பொருத்தப்பட்டிருப்பதை கண்டுபிடித்தனர்,” என போஹ்லர் கூறினார்.

வாகனங்களில் ட்ராக்கர்கள் அடிக்கடி கண்டுபிடிக்கப்படாதபோதிலும், அவற்றை மறைத்து பொருத்துவது கடினமல்ல என Active Green + Ross



நிறுவனத்தின் வாகன தொழில்நுட்ப நிபுணர் ஸ்டீவ் மேடர் தெரிவித்துள்ளார். “வாகனத்தின் முன் அல்லது பின் புற சக்கர வளைவுகள் அருகில் பொருத்தலாம். குறிப்பாக பின்புறத்தில், ஸ்பேர் டயர் பகுதி முழுவதும் உலோகத்தால் ஆனது. காந்தம் மூலம் பொருத்தப்படும் சாதனங்களை அங்கு எளிதில் மறைக்கலாம்,” என குறிப்பிட்டுள்ளார்.

திருடர்கள் புதிய மொடல் வாகனங்களை குறிவைத்து வருகின்றனர். குறிப்பாக நீண்ட நேரம் நிறுத்தப்படும் வாகனங்களில், முன் கண்ணாடி அருகிலுள்ள ஹூட் பகுதியில் டிராக்கர்கள் பொருத்தப்படுகின்றன.

“இரண்டு வாகனங்களும் டொயோட்டா மாடல்கள். கடந்த டிசம்பரில் மட்டும் 20-க்கும் மேற்பட்ட வாகனங்கள் திருடப்பட்டன.

புதிய வகை வாகனங்களே அதிகமாக குறிவைக்கப்படுகின்றன,” என போஹ்லர் தெரிவித்தார்.

வாகனங்களை நீண்ட காலம் பயன்படுத்தாமல் வைத்திருக்கும் போது, அவற்றை கராஜில் பாதுகாப்பாக நிறுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

வெளியே செல்லும்போது கடைகளுக்கு அருகில் வாகனங்களை நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் RVH வாகன நிறுத்துமிடத்தில் நடந்திருந்தாலும், டிராக்கர் சாதனங்கள் நகரம் முழுவதும் மற்றும் மாகாணத்தின் பல பகுதிகளில்கண்டுபிடிக்கப்பட்டுவருகின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## டொராண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெக்ஸ்டேல் மற்றும் ‘ஹைவே’ 17 சந்திப்பிற்கு அருகிலுள்ள இந்த வணிக வளாகத்தில் பிற்பகல் 3:31 மணியளவில் துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து அவசர அழைப்பு பெறப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிக் காயங்களுடன் பாதிக்கப்பட்ட நபரை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர், சிகிச்சை அளிக்கப்பட்டும் குறுகிய நேரத்தில் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

என உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை வெளியிடப்படவில்லை.

சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட படங்களில், வெள்ளை நிற வாகனத்தின் முன்கண்ணாடி மற்றும் சாரதி பக்க ஜன்னலில் துப்பாக்கி குண்டு துளைகள் காணப்படுகின்றன. சாரதி பக்க கண்ணாடி சிதறியிருந்தது.

சந்தேகநபர் அல்லது சந்தேகநபர்கள் ஒரு வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் குறித்த விவரங்களைத் திரட்டி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு ஏற்பட காரணமான சூழ்நிலைகள் உடனடியாக தெரியவில்லை. இருப்பினும், இது குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என விசாரணை அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.